வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
14.04.2026 செவ்வாய்க்கிழமை
இதழ் : 98
பக்கங்கள் : 08




## அமைதிக்காக குரல் கொடுக்க ஒருபோதுமே அஞ்சமாட்டேன்!


### ட்ரம்ப்பின் விமர்சனங்களுக்கு பாப்பரசர் பதில்

வத்திக்கான், ஏப். 14

ஈரான் போர் விவகாரத்தில் வத்திக்கான் மற்றும் வெள்ளை மாளிகைக்கு இடையே மோதல் முற்றியுள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் தனிப்பட்ட விமர்சனங்கள் குறித்து பாப்பரசர் லியோ தனது அதிரடியான பதிலை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி ட்ரம்ப் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில், பாப்பரசர் லியோ "குற்றங்களுக்கு எதிராக மென்மையானவர்" என்றும், அவர் ஒரு "தீவிர இடதுசாரி" போலச் செயல்படுவதாகவும்

07



## தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முயன்ற அரச பஸ்ஸினால் விபத்து!

### மானிப்பாய் பகுதியில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஏப். 14

காரைநகரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட தனியார் பஸ்ஸும் அரச பஸ்ஸும் ஒன்றை ஒன்று முந்திச் சொல்ல முற்பட்டவேளை நேற்றுக் காலை மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கு முன்பாக விபத்துக்குள்ளாகின.

தனியார் பஸ்ஸை முந்திச் செல்ல முற்பட்ட

07

## வளைகுடா நாடுகளில் இருக்கும் துறைமுகங்களைத் தாக்குவோம்!

### ஈரான் எச்சரிக்கை

தெஹ்ரான், ஏப். 14

ஈரான் துறைமுகங்களை அமெரிக்கா முற்றுகையிட்டால் வளைகுடா நாடுகளின் துறைமுகங்களைத் தாக்குவோம் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரான், அமெரிக்கா இடையே பாகிஸ்தானில் 21 மணி நேரத்துக்கும் மேல் நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

ஈரான் தரப்பில் 10 அம்ச திட்டம் முன்வைக்கப்பட்ட நிலையில், அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடக் கூடாது, ஹோர்முஸ் நீரிணையை முழுமையாகக்

07

## பால் குடித்துவிட்டு உறங்கிய குழந்தை பரிதாப உயிரிழப்பு!

### கோப்பாயில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 14

பால் குடித்துவிட்டு உறங்கிய மூன்று மாதங்கள் நிரம்பிய பெண் குழந்தை திடீரென உயிரிழந்தமை பெரும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

கோப்பாய் மத்தி, அம்மன் கோவில் வீதி பகுதியை சேர்ந்த கஜேந்திரன் கர்ஷா என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தையின் தாயார் நேற்று முன் தினம் அதிகாலை 3 மணியளவில் பாலூட்டியுள்ளார்.

07

## 23ஆம் திகதி இலங்கை வருகிறார் இந்தோனேசியப் பிரதி அமைச்சர்

கொழும்பு, ஏப். 14

இந்தோனேசியாவின் பிரதி வெளிவிவகார அமைச்சரின் அனிஸ் மட்டாவின் இலங்கை பயணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய ஏப்ரல் 23 ஆம் திகதி அவர் கொழும்பு வரவுள்ளார்.

24 ஆம் திகதிவரை இலங்கையில் தங்கி இருக்கும் அவரை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்டவர்களுடன் அனிஸ் மட்டா பேச்சு நடத்தவுள்ளார்.

அதேவேளை, மாலைதீவு ஜனாதிபதி மொக மட் மொஸ்சு எதிர்வரும் மே 4 ஆம் திகதி இலங் கைக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார் என தெரி யவருகின்றது. (அ)

## அமெ.-ஈரான் இடையே மீண்டும் பேச்சுவார்த்தை

### பாகிஸ்தான் அமைச்சர் நம்பிக்கை

இஸ்லாமாபாத், ஏப். 14

நீண்ட காலமாகப் பதற்றம் நிலவி வரும் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கான சாதகமான சூழல் காணப்படுவதாகப் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் குவாஜா ஆசிப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாவதற்கு இன்னும் வாய்ப்புகள் உள்ளதாகத் தனது கணிப்புகள் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"தற்போது ஒருவித நம்பிக்கை உணர்வு

07

## புத்தாண்டு காலத்தில் 24 மணி நேரமும் வைத்தியசாலை சேவைகள் நடைபெறும்

கொழும்பு, ஏப். 14

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் 24 மணி நேரமும் தமது சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இதற்காக விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் வைத்தியசாலை ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், புத்தாண்டு காலத்தில் பொதுமக்கள் தமது பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தினார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பட்டாசு மற்றும் வாண வேடிக்கை தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும்போது மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும், குறிப்பாக சிறுவர்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும்.

அதிக வேகத்தில் வாகனங்களை செலுத்த வேண்டாம் எனவும்,

07

## பொன்னாலையில் கத்திக் குத்து; ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில், நேற்று முன் தினம் இரவு கத்தி குத்துக்கு இலக்கான நபர் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன் தினம் இரவு, இருவருக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடு கத்தி குத்தில் முடிவடைந்தது.

கத்தி குத்தில் காயமடைந்த நபர், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு, முறைப்பாடு செய்யச் சென்ற வேளை, அவரை வைத்தியசாலைக்கு செல்லுமாறு, பொலிஸார் அனுப்பி வைத்தனர்.

இந்த நிலையில், வட்டுக்கோட்டை பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## இலங்கையில் ஏழு இலட்சத்துக்கும் அதிகமான விசேட தேவையுள்ளோர்!

கொழும்பு, ஏப். 14

நாட்டில் கிராமப்புறத் துறையிலேயே அதிகளவான மாற்றுத்திறனாளி நபர்கள் வசிப்பதாகவும் பார்வை குறைபாட்டு விகிதம் மட்டும் தோட்டப்புறத் துறையில் மிக உயர்வாகக் காணப்படுவதாகவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு அறிக்கையின்படி, இலங்கையில் 5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் உடல் மற்றும் மன ரீதியான குறைபாடுகள் உள்ளவர்கள் குறித்த விரிவான புள்ளிவிவரங்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, இலங்கையில் 5

07

## 119 அழைப்புக்களுக்கு பதிலளிப்பதில் தாமதம்

கொழும்பு, ஏப். 14

119 பொலிஸ் அவசர உதவி எண்ணிற்கு செய்யப்பட்ட அழைப்புகளுக்கு பதிலளிப்பதில் தாமதம் ஏற்படுகிறது என பொதுமக்களிடமிருந்து பல புகார்கள் கிடைத்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இத்தகைய முறைப்பாடுகள் தினசரி தமக்கு கிடைக்கின்றன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

119 அவசர உதவி எண்ணிற்கு தினமும் சுமார்

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபை ஊழியர்களுக்கு உரிய இழப்பீடு வழங்கவில்லை!

## ஓய்வு பெற்ற ஊழியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 14

இலங்கை மின்சார சபை கலைக்கப்பட்டு, மறுசீரமைப்புச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, விருப்ப ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு இதுவரை உரிய இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை என ஓய்வுபெற்ற ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 09ஆம் திகதி மின்சார சபை கலைக்கப்பட்டபோது, ஓய்வு பெறுபவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்திருந்தது. எனினும், இதுவரையில் அந்த கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் தவறியுள்ளதாக சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு ஓய்வு பெற்ற ஊழியர் சங்கம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. உரிய நிதி கிடைக்காத காரணத்தினால் தாம் தற்போது பாரிய நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக எரிசக்தி அமைச்சர் குமார் ஜயக்கொடிக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார சபை மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ், சபை 06 நிறுவனங்களாகப் பிரிக்கப்பட்டது. இதற்கு இணங்காத ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு பெறும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இதன்போது, ஒரு ஊழியருக்கு அதிகபட்சமாக 50 இலட்சம் ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் சுமார் 2,000 ஊழியர்கள் கடந்த மார்ச் 09ஆம் திகதி சேவையிலிருந்து விலகினர்.

எதிர்வரும் சிங்கள, தமிழ் புத்தாண்டு காலத்தில் தமது குடும்பங்களுடன் பண்டிகையைக் கொண்டாடக் கூட வசதியின்றி, கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதாக ஊழியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இழப்பீட்டுத் தொகை மட்டுமன்றி, அவர்களது ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி, பணிக்கொடை ஆகியவற்றைக் கூட இன்னும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

பல வருடங்களாக மின்சார சபைக்கு ஆற்றிய சேவைக்கான சட்டபூர்வ நிதிப் பாதுகாப்பை அரசாங்கம் தட்டிப்பறித்துள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# பஸ்களில் அதிகளவான கட்டணம் வசூலித்தால் 1955-க்கு அழையுங்கள்

கொழும்பு, ஏப். 14

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிகக் கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் மற்றும் சட்டவிரோதப் பஸ் சேவைகள் குறித்து முறைப்பாடு செய்யுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பயணிகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

பண்டிகைக் காலங்களில் பஸ் பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடப்படுவதைத் தடுக்கும் நோக்கில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இது குறித்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஆணைக்குழுவின் செயற்பாட்டு பணிப்பாளர் ஷெரின் அத்துக்கோரள, பயணிகள் தங்களைச் சுரண்டும் பேருந்துகள் குறித்து 1955 என்ற இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்ய முடியும் எனத் தெரிவித்தார்.

பண்டிகைக் கால நெரிசலைப் பயன்படுத்தி, முறையான அனுமதிப்பத்திரம் இன்றிப் பயணிகளை ஏற்றிச் செல்லும் பஸ்கள் குறித்துப் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் எச்சரித்தார். (அ)

# தேவையான பஸ்கள் சேவையில்!

கொழும்பு, ஏப். 14

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டுக்காக கொழும்பில் இருந்து தமது ஊர்களுக்குச் செல்லும் மக்களுக்காக, நேற்றைய தினத்திலும் தேவைக்கேற்ப பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

கடந்த சில நாள்களில் வழமையான பஸ் அட்டவணைக்கு மேலதிகமாக 1,500 பஸ்கள் கொழும்பிலிருந்து இயக்கத் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

# உகண்டா பெண் கைது !

கொழும்பு, ஏப். 14

கட்டுநாயக்க விமான நிலையத்தில் கொக்கெய்ன் போதைப் பொருளை உடலில் மறைத்து கடத்தி வந்த உகண்டா நாட்டுப் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

உகண்டாவின் கம்பாலா நகரிலிருந்து கட்டார் வழியாக நேற்று முன் தினம் காலை 9.30 மணியளவில் இலங்கையை வந்தடைந்த உகண்டா நாட்டுப் பெண் ஒருவர், சுங்க போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

47 வயதுடைய இந்தப் பெண் குறித்துக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபரான பெண்ணை முழுமையான சோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் தனது உடலில் 21 மாத்திரைகளாக மறைத்து வைத்திருந்த 274 கிராம் கொக்கெய்ன் கண்டறியப்பட்டது.

மீட்கப்பட்ட இந்தப் போதைப்பொருளின் சந்தைப் பெறுமதி சுமார் ஒரு கோடியே 23 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் மேலும் சில கொக்கெய்ன் மாத்திரைகளை விழுங்கியிருக்கலாம் என அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இதன் காரணமாக, அவரது உடலுக்குள் இருக்கும் ஏனைய போதைப்பொருள் மாத்திரைகளை வெளியேற்றுவதற்காகவும், மேலதிக மருத்துவ சிகிச்சைக்காகவும் அவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# பௌத்த பிக்குகளின் அமைதிக்கான பயணத்தில் இணைகிறது ஆலோகா!

கொழும்பு, ஏப். 13

இலங்கையில் சமாதானத்தை வலியுறுத்தி எதிர்வரும் 21 முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள "அமைதிக்கான நடைப் பயணத்தில்", அமெரிக்காவிலிருந்து வரும் பௌத்தப் பிக்குமாருடன் "அலோகா" என்ற புகழ்பெற்ற நாயும் இணையவுள்ளது.

அமெரிக்காவில் சுமார் 2,300 மைல்கள் தூரம் பௌத்த பிக்குகளுடன் பயணித்து உலகப் புகழ்பெற்ற இந்த நாய், தற்போது இலங்கை மக்களின் கவனத்தையும் ஈர்க்கவுள்ளது.

அமெரிக்க அமைதி நடைபயணத்தின் நிறுவனர் பன்னாகர தேரர் தலைமையில் 12 பிக்குகள் பங்கேற்கும் இந்தப் பேரணி, ஏப்ரல் 21ஆம் திகதி அனுராதபுரம் ஜய ஸ்ரீ மகா போதியில் ஆசீர்வாதங்களுடன் தொடங்குகிறது.

இந்த நடைபயணத்தின் ஒரு பகுதியாக, புனித வெள்ளரச மரத்தின் கன்று ஒன்றும் எடுத்துச் செல்லப்படவுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் 22 ஆம் திகதி தம்புள்ளையில் இருந்து தொடங்கும் இந்தப் பேரணி நாவுல, மாத்தளை, கண்டி, கடுகண்ணாவை, கேகாலை உள்ளிட்ட முக்கிய நகரங்கள் வழியாக எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பு சுதந்திர சதுக்கத்தை சென்றடையும்.

அங்கு நடைபெறும் நிறைவு விழாவில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க புனித மரக்கன்றை அமெரிக்கப் பிக்குமாரிடம் ஒப்படைப்பார்.



ஆலோகா நாயை வானூர்தி மூலம் பாதுகாப்பாக அழைத்து வரும் முயற்சிகள் தற்போது 50 வீத நிலையில் உள்ளதாகவும், அதனை உறுதி செய்ய அனைத்து ஏற்பாடுகளும் தீவிரமாக நடைபெற்று வருவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பேரணியின் போது பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்கு நடவடிக்கைகளை அந்தந்தப் பகுதி பொலிஸார் கவனிக்க உள்ளனர். (அ)

# சூரியவெவ பொலிஸார் மீது தாக்குதல்! விடுதி சுற்றிவளைப்பின்போது மோதல்!!

## மூவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 14

அம்பாந்தோட்டை, சூரியவெவ, கோன்கெட்டியார பகுதியில் சட்டவிரோத சூதாட்ட விடுதி ஒன்றைச் சுற்றிவளைக்கச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோன்கெட்டியார பகுதியில் சூதாட்ட விடுதி ஒன்று இயங்கி வருவதாக சூரியவெவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, நேற்று முன் தினம் அதிகாலை விசேட பொலிஸ் குழுவொன்று அங்கு சுற்றிவளைப்பை மேற்கொண்டது.

இதன்போது, அங்கு சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த கும்பல் ஒன்று, சுற்றிவளைப்பில் ஈடுபட்ட பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், இரு அதிகாரிகளைத் தாக்கி அவர்களது கடமைக்கு இடையூறு விளைவித்துள்ளனர். இத்தாக்குதலில் காயமடைந்த இரு பொலிஸ் அதிகாரிகளும் சிகிச்சைக்காக சூரியவெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் கடமையைச் செய்யவிடாது தடுத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், மூன்று சந்தேகநபர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் சூரிய வெவ, வெலிஆர மற்றும் தர்மிகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன்,

சம்பவம் குறித்து சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# புத்தாண்டு காலத்தில் சமூக ஊடக பயன்பாடுகள் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 14

தமிழ் - சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் சமூக ஊடகங்களை பயன்படுத்தும் போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

பண்டிகைக் காலங்களில் சுற்றுலா செல்லும் போது, தாங்கள் இருக்கும் இடங்கள் தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை உடனுக்குடன் சமூக வலைத்தளங்களில் பதிவிடுவதைத் தவிர்க்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தாங்கள் வீட்டில் இல்லை என்பதையும், குடும்பத்துடன் வெளி இடங்களுக்கு சென்றிருப்பதையும் சமூக ஊடகங்கள் வாயிலாகப் பகிரங்கப்படுத்துவது, திருடர்களுக்கு வாய்ப்பாக அமையக்கூடும் என பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

வீடுகள் ஆளில்லாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் இத்தகைய பதிவுகள், திருட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கக் காரணமாகின்றன.

பாதுகாப்பு அபாயங்களைக் குறைக்கும் பொருட்டு, பொதுமக்கள் தங்களது விடுமுறைக் கால அனுபவங்களையும் புகைப்படங்களையும் சுற்றுலா முடிந்து வீடு திரும்பிய பின்னர் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து கொள்ளுமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் வீடுகளை விட்டு வெளியே செல்லும் போது, அயலவர்களிடம் அது குறித்து அறிவிப்பதோடு,

பாதுகாப்பு நடைமுறைகளை முறையாகப் பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

14.04.2026 செவ்வாய்க்கிழமை

விசுவாவசு வருடம், சித்திரை 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், சாணக்கியனின் கவனத்துக்கு .......!

மாகாண சபைகள் தேர்தல் முறை குறித்து ஆராய்ந்துவரும் பாராளு மன்றத தெரிவுக் குழு கடந்த வாரம் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் கருத்துக்களைக் கேட்டறிந்திருக்கிறது.

தெரிவுக்குழு முதன் முதலாக கடந்த மாதம் கூடியபோது அதன் தலை வரான வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் மூன்று மாதங்களில் குழு அதன் முதல் அறிக்கையைச் சமர்ப்பிக்கும் என்று கூறியிருந்தார்.

மூன்று மாதங்களில் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதே தெரிவுக் குழுவின் ஆணையாக இருக்கும் நிலையில் முதல் அறிக்கை பற்றிய அறிவிப்பு பல அறிக்கைகள் வரும் என்பதன் அறிகுறி என்று ஈழநாடு அப்போது குறிப்பிட்டிருந்தது.

சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் விளக்கங்களை தொடர்ந்து தெரிவுக் குழுவின் தலைவர் 2017 மாகாண சபைகள் (திருத்தம் ) சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய இரு தீர்ப்புகள், மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு இருக்கக்கூடிய தடைகள் மற்றும் இந்த பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு இருக்கக்கூடிய சட்ட ஏற்பாடுகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்ததை கேட்டிருக்கிறார்.

தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டத்துக்கு எல்லை நிர்ணயக்குழுவின் அதிகாரிகளை அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மாகாணங்களின் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்வது தொடர்பில் நிலவும் கருத்து வேறுபாடுகள் காரணமான முட்டுக்கட்டையை அகற்ற துரிதமான ஒரே வழி பழைய முறையில் (விகிதாசாரப் பிதிநிதித்துவ முறை) தேர்தல்களை நடத்துவதேயாகும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவுக்குழுவிடம் தெளிவாகக் கூறியதன் பின்னரே புதிய அறிக்கை ஒன்றையை தயாரிக்குமாறு ஹேரத் கேட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

அந்த அறிக்கை வர எவ்வளவு காலம் செல்லுமோ யாரறிவார்?

தேர்தல்முறை குறித்து அரசாங்கம் திட்ட வட்டமான தீர்மானத்தை எடுத்தால் எந்த் நேரத்திலும் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஏற்கெனவே பல தடவைகள் அறிவித்துவிட்டார்..

கலப்புத் தேர்தல் முறையில் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதானால் மீண்டும் எல்லை நிர்ணயக் குழுவை நியமிக்க வேண்டியிருக்கும் என்பதும் அதன் செயன்முறைகளை நிறைவு செய்வதற்கு ஓரிரு வருடங்களாவது தேவை என்பதும் பிரகாசமாகத் தெரிந்த உண்மை.

அதனால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாவிட்டால் இந்த தெரிவுக் குழுவும் காலத்தை கடத்தும் ஒரு தந்திரோபாயமே என்றும் அதில் உறுப்பினர்களாக இருக்கும் சிறுபான்மைச் சமூகங்களின் பிரதிநிதிகளான தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்றக் குழுவின் தலைவர் சாணக்கியன் இராசமாணிக்கம் போன்றவர்கள் வெளிப்படையாகவே அறிக்கை ஒன்றை தெரிவுக் குழுவில் சமர்ப்பிப்பித்து தங்களது உறுதியான நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்வது தற்போதைய தருணத்தில் பொருத்தமான காரியமாக இருக்கும் என்று ஈழநாடு நம்புகிறது.

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் தலைவர் பீட்டர் கெனமன் ஒரு தடவை பாராளுமன்றத்தில் ஆணைக்குழுக்கள், தெரிவுக்குழுக்கள், விசாரணைக் குழுக்களைப் பற்றி கூறிய சுவாரஷ்யமான கருத்தை நினைவுபடுத்துவது நல்லது.

"இந்த குழுக்கள் எல்லாம் மலசல கூடத்துக்கு போவதைப் போன்றது. அங்கு போனதும் அமர்வுகள் (**Sittings**) இடம்பெறும். அதற்கு பிறகு என்ன நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். (**Matter is dropped**)

# பெருந்தோட்ட புற மக்களில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் வெளிநாடுகளுக்கு!

*கொழும்பு, ஏப். 14*

இலங்கையின் பெருந்தோட்டப்புறங்களிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் சென்றுள்ளவர்களில் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்து காணப்படுவதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் சனத்தொகை மற்றும் வீடமைப்புத் தொகைமதிப்பு அறிக்கையின் படி, இலங்கையிலிருந்து தற்காலிகமாக வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தோர் தொடர்பான விரிவான தரவுகள் பல முக்கிய சமூகப் பொருளாதாரப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன.

இந்த ஆய்வில், ஆறு மாதங்களுக்கும் மேலாகத் தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கும் அல்லது அத்தகைய நோக்குடன் சென்ற 672, 249 நபர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஆண்களின் பங்களிப்பு 61.4 வீதமாகவும் பெண்களின் பங்களிப்பு 38.6 வீதமாகவும் காணப்படுவதுடன், இந்தத் தரவுகள் அனைத்தும் இலங்கையில் உள்ள அந்தந்த வீடுகளின் எஞ்சிய உறுப்பினர்களிடமிருந்து திரட்டப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியான பரம்பலை அவதானிக்கும்போது, இலங்கையின் பொருளாதார மையங்களாகத் திகழும் கம்பஹா, கொழும்பு மற்றும் குருணாகலை ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகளவானோர் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

குறிப்பாக கம்பஹா மாவட்டத்திலிருந்து 12.8 வீதத்தினரும், கொழும்பு மாவட்டத்திலிருந்து 10.6 வீதத்தினரும் தற்காலிகமாக வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இதற்கு நேர்மாறாக, மன்னார், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மிகக்குறைந்த சதவீதத்தினர் (தலா 0.2 வீதம்) பதிவாகியுள்ளனர்.

வயதுப் பிரிவுகளின் அடிப்படையில் நோக்குகையில், நாட்டின் உழைக்கும் சக்தியாகக் கருதப்படும் 30 முதல் 59 வயதுக்குட்பட்ட பிரிவினரே 66.8 வீத பங்களிப்புடன் முன்னிலையில் உள்ளனர்.

18 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் 27.9 சதவீதமாகவும், 60 வயதிற்கு மேற்பட்ட முதியவர்கள் 2.4 சதவீதமாகவும் காணப்படுகின்றனர்.

புலம்பெயர்வுக்கான முதன்மைக் காரணியாகத் தொழில் வாய்ப்பு விளங்குவதுடன், மொத்த எண்ணிக்கையில் 86 சதவீதமானோர் வேலை வாய்ப்புக்காகவே வெளிநாடு சென்றுள்ளனர்.

நாடுகளின் அடிப்படையில் பார்க்கும்போது, மத்திய கிழக்கு நாடுகள் இலங்கைத் தொழிலாளர்களின் பிரதான இலக்காகத் தொடர்ந்தும் நீடிக்கின்றன. ஒட்டுமொத்தமாக குவைத், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளில் அதிகப்படியான இலங்கையர்கள் வசிக்கின்றனர்.

அதேவேளை, உயர்கல்வியைத் தொடர்வதற்காக வெளிநாடு செல்பவர்களில் பெரும்பாலானோர் அவுஸ்திரேலியா (24.1 வீதம்) மற்றும் ஜப்பான் (21.3 வீதம்) ஆகிய நாடுகளைத் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஹோர்முஸ் நீரிணை விவகாரம்: முற்றுகையில் ஈடுபடமாட்டோம்

## பிரிட்டன் பிரதமர் திட்டவட்டம்

*லண்டன், ஏப். 14*

ஹோர்முஸ் நீரிணையை சுற்றியுள்ள பதற்ற நிலைக்கு மத்தியில், அந்த பகுதியில் எந்தவொரு முற்றுகை நடவடிக்கையிலும் பிரிட்டன் ஈடுபடமாட்டாது என்று பிரதமர் கியர் ஸ்டார்மர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளமான டுவிட்டரில் வெளியிட்டுள்ள குறிப்பில், கடல் போக்குவரத்து சுதந்திரத்தை பாதுகாக்கும் நோக்கில் பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட கூட்டாளி நாடுகளுடன் இணைந்து விரைவாக ஒரு விரிவான கூட்டணியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம்.

மேலும், மற்ற நாடுகள் தங்கள் விவகாரங்களை எவ்வாறு நிர்வகிக்க வேண்டும் என்பதை அமெரிக்கா தீர்மானிக்க முடியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஹோர்முஸ் நீரிணையை மையமாகக் கொண்டுள்ள சர்வதேச பதற்றநிலைக்கு இடையே, பிரிட்டனின் இந்த நிலைப்பாடு கவனிக்கத் தக்க ஒன்றாக பார்க்கப்படுகிறது. (எ)

# சர்வதேச சட்டத்தின்படி கடற்பயணம் சுதந்திரமாக நடைபெற வேண்டும்

## ட்ரம்பின் ஹோர்மூஸ் நீரிணை முற்றுகை அறிவிப்பு குறித்து ஆஸி பிரதமர் பதில்

*சிட்னி, ஏப். 14*

ஹோர்மூஸ் நீரிணை அனைவருக்கும் திறந்திருப்பதை காண விரும்புகிறோம். சர்வதேச சட்டத்தின்படி கடற்பயணம் சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்று அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அல்பானீஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஹோர்மூஸ் நீரிணையை முற்றுகையிடும் அறிவிப்பு வெளியிட்டுள்ள நிலையில், அவுஸ்திரேலிய பிரதமர் அதற்கு முக்கிய பதில் அளித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான போர் நிறுத்த பேச்சுவார்த்தைகள் எந்தவொரு உடன்படிக்கையும் இல்லாமல் தோல்வியில் முடிந்தன.

இதையடுத்து, ஹோர்மூஸ் நீரிணையை முற்றுகையிட அமெரிக்கா தீர்மானித்துள்ளது என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க கடற்படை ஹோர்மூஸ் நீரிணை பகுதியில் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலக நாடுகளின் கப்பல் போக்குவரத்து இந்த வழியாக நடைபெறுவதால், இந்த முடிவு உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தச் சூழலில், அவுஸ்திரேலிய பிரதமர் அந்தனி அல்பானீஸ் முக்கிய விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்காவிடம் இருந்து எங்களுக்கு எந்தவொரு வேண்டுகோளும் வரவில்லை. இந்த நடவடிக்கையில் பங்கேற்குமாறு எங்களை அணுகவில்லை.

மேலும், பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும், இந்த மோதல் முடிவுக்கு வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஹோர்மூஸ் நீரிணை அனைவருக்கும் திறந்திருப்பதை காண விரும்புகிறோம். சர்வதேச சட்டத்தின்படி கடற்பயணம் சுதந்திரமாக நடைபெற வேண்டும்.- என்று குறிப்பிட்டுள்ளார்.

ஹோர்மூஸ் நீரிணையை மையமாகக் கொண்ட இந்த புதிய பதற்றம், உலக பொருளாதாரத்துக்கும் பாதுகாப்புக்கும் பெரும் சவாலாக மாறுமா? என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 14 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 01
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : சூன்ய



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**இடபம்**
சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். இப்பொழுது சந்திக்க நேரிடும்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்பட தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் நீங்கும்.உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அடுக்கடுக்கான வேலைகளால் அவதிக்குள்ளாவீர்கள். குடும்பத் தில் உள்ளவர்களிடம் வளைந்து கொடுத்து போவது நல்லது. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**சிம்மம்**
கடினமான வேலைகளையும் மாறுபட்ட அணுமுறையால் முடித்துக் காட்டுவீர்கள். சகோதர வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை சாதகமாக அமையும்.

**கன்னி**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வழக்குகள் சாதகமாக அமையும். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**துலாம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சகோதரர்கள் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**விருட்சிகம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். பணம் பற்றாக்குறை நீடித்தாலும் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**தனுசு**
இங்குடும்பத்தாருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்சினைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் மனைவிக்குள் இருந்த மனக்கசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தோற்றப் பொலிவு கூடும். வர வேண்டிய பணம் கைக்கு வந்து சேரும்.

**கும்பம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மனதில் இனம் புரியாத கவலை வந்து போகும். வீட்டிலும் வெளியிலும் மற்றவர்களை அனுசரித்துப் போங்கள். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்**
எளிதில் முடித்து விடலாம் என்று நினைத்த காரியங்கள் கூட இழுபறியில் போய் முடியும். எதிர்மறை எண்ணங்கள் வந்து செல்லும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

# கூரிய ஆயுதத்தால் குத்தி இளைஞன் படுகொலை!

## மேலும் இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரத்தில் இளைஞன் ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தி படுகொலை செய்யப்பட்டார்.

மேலும், இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தொல்புரம், கொட்டடியம்பதி ஆதி முத்துமாரியம்மன் கோவிலடியை சேர்ந்த குகதீஸ்வரன் மயூரன் (வயது- 27) என்ற இளைஞனே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார். சபேஷ்வரன் ரஜீவன்(வயது- 27) மற்றும் கமலநாதன் பானுஷன்(வயது - 28) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், ஒரே ஊரைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களுக்கிடையே கடந்த 2021ஆம் ஆண்டு முதல் முரண்பாடு நிலவிவந்தது.

நேற்று முன்தினம் இரவு குறித்த முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புனரமைப்பு பணிகள் நடைபெற்றன. அந்த இடத்துக்கு மூன்று நண்பர்களுடன் வந்த சந்தேகநபர் முரண்பாட்டில் ஈடுபட்டார். இதன்போது குறித்த சந்தேகநபரின் தாக்குதலுக்கு உள்ளாகி பானுஷன் என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

இதன்பின்னர் சந்தேகநபர் தப்பிச் செல்ல முயன்றபோது கொலை செய்யப்பட்ட மயூரன், சந்தேகநபரை பிடிப்பதற்கு முயற்சித்தார். இதன்போது, சந்தேகநபர் மயூரன் மீதும் அதே கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொணடார். இதன்போது, அவர் சம்பவ இடத்திலேயே விழுந்து உயிரிழந்தார்.

இந்த நிலையில், குறித்த சந்தேகநபர் தனக்கும் காயம் இருப்பதாக கூறி முறைப்பாடு செய்வதற்கு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். கொலை இடம்பெற்றமை தெரியாத பொலிஸார் குறித்த நபரை சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதன்பின்னர் கொலை இடம்பெற்றமை தெரியவந்த நிலையில் சந்தேகநபரை மருத்துவமனையில் வைத்து கைது செய்தனர். பொலிஸ் கண்காணிப்பில் அவர் தொடர்ச்சியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் தப்பிச் சென்ற நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பெறுபவர் உட்பட இருவரை பொலிஸார் கைது செய்தனர். இது குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-03-05)

# சகோதரி மீது தாக்குதல் நடத்திய சகோதரன் கிணற்றில் வீழ்ந்து பலி

முல்லைத்தீவு, ஏப். 14

முல்லைத்தீவு, முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணுக்கேணி பகுதியில் சகோதரர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில், தனது சகோதரியை கத்தியால் தாக்கிவிட்டு தப்பியோடிய சகோதரன், கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கணுக்கேணி பகுதியில் வசிக்கும் சகோதரர்களுக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.


பின்னர் கைக்கலப்பாக மாறிய நிலையில், சகோதரன் ஒருவர் தனது சகோதரியை கத்தியால் தாக்கினார். காயமடைந்த சகோதரி, அப்பகுதியில் கிராம உத்தியோகத்தராக பணியாற்றி வருகிறார்.

படுகாயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சகோதரி மீது தாக்குதல் நடத்திய பின்னர், அதன் விளைவுகளுக்கு பயந்து குறித்த சகோதரன் வீட்டை விட்டு தலைமறைவாகியிருந்தார். இந்த நிலையில், இரண்டு நாட்களாக அவரை உறவினர் கள் தேடி வந்த நிலையில், குமுழமுனையில் உள்ள அவர்களது வீட்டுத் தோட்ட கிணற்றிலி ருந்து சடலமாக மீட்கப்பட் டார்.

சடலமாக மீட்கப்பட்டவர் 32 வயதுடையவராவார். உயிரிழந்தவர் நீண்டகாலமாக மனநல பாதிப்புக்கு உள்ளாகி சிகிச்சை பெற்று வந்தவர் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.இந்தச் சம்பவம் குறித்து முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வவுனியாவில் களைகட்டிய வியாபாரம்



வவுனியா, ஏப். 14

தமிழ் - சிங்கள புதுவருட பிறப்பை முன்னிட்டு வவுனியாவில் வியாபாரம் களை கட்டியுள்ளதுடன், நகரில் சனநெரிசல்களையும் அவதானிக்க முடிகிறது.

2026 ஆம் ஆண்டு தமிழ் - சிங்கள புத்தாண்டானது இன்று கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு வவுனியா நகருக்கு அதிகளவிலான மக்கள் வருகை தந்து புத்தாடைகள், வெடிகள், இனிப்பு பண்டங்களை கொள்வனவு செய்தனர்.

(எ-10)

# கடலட்டை பிடித்த 06 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 14

நாகர்கோவில் கடற்கரை பகுதியில் சட்டவிரோதமான முறையில் இரவு நேர முக்குளிப்பில் ஈடுபட்டு கடலட்டைகளை பிடித்த 6 சந்தேகநபர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

கடற்படையினர் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின் போதே சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது சந்தேகநபர்களிடமிருந்து, 939 கடலட்டைகள், 2 டிங்கி படகுகள் மற்றும் முக்குளிப்பு உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 முதல் 37 வயதுக்குட்பட்டவர்கள் என்பதுடன், அவர்கள் மன்னார் மற்றும் வல்வெட்டித்துறை பகுதிகளை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நிதி கொடுக்கல்- வாங்கல் குறித்த 3 சட்டமூலங்களை வாபஸ் பெறுக

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அரசாங்கத்திடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 14

நிதி கொடுக்கல்- வாங்கல்கள் சார்ந்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மூன்று சட்டமூலங்களையும் அரசாங்கம் வாபஸ் பெறவேண்டும் என்று வலியுறுத்தியுள்ள மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம், ஜனநாயக சுதந்திரத்தை பாதுகாப்பதுடன் நிறைவேற்றதிகாரத் துஷ்பிரயோகத்தைத் தடுக்கும் வகையில் இந்தச் சட்டமூலங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை வாய்ந்த பரந்துபட்ட கலந்தாலோசனைகளை முன்னெடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: அரசாங்கத்தால் கடந்த வியாழக்கிழமை பாரா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்) சட்ட மூலம், 2006 ஆம் ஆண்டு 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தை திருத்தும் சட்டமூலம் மற்றும் கடந்த மார்ச் மாதம் சமர்ப்பிக்கப் பட்ட பணத்தூயதாக்கலைத் தடுக்கும் (திருத்தம்) சட்டமூலம் என்பன தொடர்பில் எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்துகிறோம்.

இந்தச் சட்டமூலங்கள் நிதி செயல்பாட்டு பணிக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சர்வதேச நியமங்களுக்கு இணங்குவதை நோக்கமாக கொண்டிருப்பினும், முன்னைய அரசாங்கங்களால் இவ்வாறான சட்டங்கள் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கும், அவற்றை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

இதேவேளை இந்தச் சட்ட மூலங்கள் தொடர்பில் பொது மக்களுடனோ அல்லது சம்பந்தப்பட்ட ஏனைய பங்காளிகளுடனோ எந்தவித கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அத்தோடு தமிழ், சிங்கள புத்தாண்டு விடுமுறைக்கு முன்பதாக இந்தச் சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதானது, அவற்றை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்துவதற்கான இரண்டு வார காலஅவகாசத்தில் மட்டுப்பாடுகளை தோற்றுவித்துள்ளது.

இதேபோன்று இந்தச் சட்ட மூலங்களில் குற்றங்களுக்கு பரந்த வரைவிலக்கணம் வழங்கப்பட்டிருப்பதும், நீதித்துறை மேற்பார்வையின்றி நிதிக் குற்ற விசாரணைப்பிரிவுக்கு மட்டுமீறிய விசாரணை அதிகாரங்கள் வழங்கப்பட்டிருப்பதும் தீவிர கரிசனைக்குரிய விடயங்களாகும்.

அத்தோடு கடந்த காலங்களில் இவ்வாறான சட்டங்கள் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களை இலக்குவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கும் பின்னணியில், சர்வதேச கடப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் நோக்கில் உருவாக்கப்படும் சட்டங்கள் துஷ்பிரயோகங்களுக்கு ஒருபோதும் இடமளிக்கக்கூடாது.

எனவே, அரசாங்கம் இந்தச் சட்டமூலங்களை வாபஸ் பெறுவதுடன், ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாப்பதுடன் நிறைவேற்றதிகாரத் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் இந்தச் சட்டமூலங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மை வாய்ந்த பரந்துபட்ட கலந்தாலோசனைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# பண்டிகைக்கால சுற்றிவளைப்பு 30 ஆம் திகதி வரை நீடிக்கும்

கொழும்பு, ஏப். 14

பண்டிகை காலத்தை முன்னிட்டு முன்னெடுக்கப்படும் விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் சோதனை நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதிக்குள், நுகர்வோரை அசௌகரியத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பில் சுமார் 2,000 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டன என்று அந்த அதிகார சபையின் தகவல் மற்றும் நுகர்வோர் விவகார பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நுகர்வோர் விவகார அதிகார சபை முன்னெடுக்கும் விசேட சுற்றிவளைப்பு வேலைத்திட்டத்தை எதிர்வரும் 30ஆம் திகதி வரை செயல்படுத்துகிறோம்.

இதற்கமைய அதிகாரிகள் தேவையான தலையீடுகளை மேற்கொள்வார்கள் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# தேசிய கல்வியியல் கல்லூரிகளின் நேர்முகத்தேர்வு திகதி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14

தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு ஆசிரியர் பயிற்சிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் திகதிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

2023ஃ2024 கல்வியாண்டுக்கான க.பொ.த. உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த இணைப்புகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் மே 08 ஆம் திகதி வரை நேர்முகப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தந்த மாவட்டங்களில் உள்ள சம்பந்தப்பட்ட தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இந்தப்பரீட்சைகள்நடைபெறவுள்ளன.

நேர்முகப்பரீட்சைக்காக தகுதி பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் பெயர்ப்பட்டியல் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.moe.gov.lk) வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# உலக சந்தையில் நேற்று மீண்டும் மசகு எண்ணெய் விலை உயர்வு

கொழும்பு, ஏப். 14

உலக சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய்யின் விலை மீண்டும் 100 அமெரிக்க டொலர்களை கடந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஈரானின் துறைமுகங்களை முடக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டதை அடுத்து, இந்த விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

இதன்படி, பிரெண்ட் வகை மசகு எண்ணெய் ஒரு பீப்பாய் விலை 7 சதவீதத்தால் அதிகரித்து, அதன் புதிய விலை 102 டொலர்களாக காணப்படுகிறது.

டபிள்யூ. டி. ஐ. வகை மசகு எண்ணெய் விலை 8 சதவீதத்தால் உயர்ந்துள்ளதுடன், ஒரு பீப்பாயின் விலை 104.50 டொலர்களாக பதிவாகியுள்ளது. (எ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிலக்கரி விலைமனு விவகாரம்:

# அரசாங்கத்துக்கு எதிராக சி. ஐ. டியில் முறைப்பாடு!

கொழும்பு, ஏப். 14

நிலக்கரி விலை மனு கோரலில் இடம்பெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் சிலர் நேற்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

குறித்த விலை மனுவை ஜனாதிபதிக்கு நெருக்கமான ஒருவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட விதம் தொடர்பான குரல் பதிவு ஒன்று வெளியாகியுள்ளதாக தெரிவித்து, இந்த முறைப் பாட்டை அவர்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறுகையில்,


"ஒரு குரல் பதிவு வெளியாகியுள்ளது. அதைக் கேட்கும் போது அங்கேயும் ஒரு மோசடி நடந்துள்ளது என்பது புரிகிறது. ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான ஒருவருக்கு இந்த விலை மனுவை வழங்க வேண்டும் என்பது தொடர்பான கலந்துரையாடல் அந்த குரல் பதிவில் உள்ளது.

எனவே, அந்த குரல் பதிவு மற்றும் அதில் இடம்பெற்றுள்ள விடயங்கள் குறித்து உடனடியாக விசாரணை நடத்துமாறு கோரி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளோம்.

அந்த குரல் பதிவில் ஜனாதிபதியின் பெயர் மற்றும் அவருக்கு மிக நெருக்கமான தொழிலதிபர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

இதன் மூலம் அங்கேயும் தெளிவாக ஒரு மோசடி நடந்துள்ளது என்பது உறுதியாகிறது."- என்றார். (எ)

## மின்னுற்பத்திக்கான எரிபொருள் தாங்கிய கப்பல் நாட்டுக்கு வந்தது



கொழும்பு, ஏப். 14

மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் தாங்கிய கப்பல் நாட்டை வந்தடைந்தது.

30, 000 மெட்ரிக் தொன் பேர்னஸ் எண்ணெய்யுடன் இந்தக் கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் குறித்த கப்பல் நாட்டை வந்தடைந்ததுடன், அதில் உள்ள எரிபொருளை கொலன்னாவ எண்ணெய் களஞ்சிய முனையத்துக்கு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ)

## ஐஸ் போதைப்பொருளுடன் மருதானையில் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 14

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஞ்சிகாவத்தை, கோவில்வத்தை பகுதியில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஹெரோயினுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தக் கைது நடவடிக்கையானது நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருதானை பொலிஸ் நிலைய அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போது இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து 750 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 150 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.

மேலும், இந்தச் சம்பவம் குறித்து மருதானை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.(எ)

## சுகாதார பரிசோதகர்களால் வவுனியாவில் சோதனைகள்

வவுனியா, ஏப். 14

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு வவுனியா நகரம் முழுவதும் சுகாதார நிலையை உறுதிப்படுத்தும் நோக்கில் நேற்று விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் மேஜயா தலைமையிலான குழுவினர் நகரின் முக்கிய வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மற்றும் பொது இடங்களில் திடீர் சோதனைகளை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது உணவு பாதுகாப்பு, சுத்தம், காலாவதியான பொருட்கள் மற்றும் சுகாதார விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது குறித்து தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டன.

இதேவேளை, சுகாதார



விதிமுறைகளை மீறிய சில வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன், தேவையான இடங்களில் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும், பொதுமக்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்காக இத்தகைய சோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றும் சுகாதார பிரிவினர் தெரிவித்ததுடன், பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். (எ-10)

பண்டிகை கால விசேட சுற்றிவளைப்பு:

## 817 விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள்

கொழும்பு, ஏப். 14

தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தை முன்னிட்டு, பொது மக்களின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனைகளின் போது 817 விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இந்த விசேட நடவடிக்கையானது இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேற்கொள்ளப்பட்ட 967 உணவுச் சோதனைகளின் ஊடாகவே இந்த 817 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.


நாடளாவிய ரீதியில் 2,300 பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பங்கேற்புடன் இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, தற்போதும் இந்த நடவடிக்கைகள் தொடர்கின்றன.

இதன்படி, இதுவரை மேற கொள்ளப்பட்ட சோதனைகளின் கீழ் 11,064 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன், 967 உணவுச் சோதனைகளும், 3,045 உணவுப் பொருட்கள் பொறுப் பேற்புகளும் இடம்பெற்றன.

அத்துடன் 2,299 சந்தர்ப்பங்களில் உணவுகள் அழிக்கப்பட்டதுடன், 817 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன என்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் பி. பொரலெஸ்ஸ தெரிவித்தார். (எ)




## பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகம் வருகை



கொழும்பு, ஏப். 14

பாகிஸ்தான் கடற்படையின் 'ஜேுவ வுயுஐஆருசு' மற்றும் 'ஜேுவ யுளுடுயுவு' போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன. பாகிஸ்தான் கடற்படையின் 'ஜேுவ வுயுஐஆருசு' மற்றும் 'ஜேுவ யுளுடுயுவு' ஆகிய போர்க்கப்பல்கள் நல்லெண்ண பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்தக் கப்பல்கள் இலங்கை கடற்படையுடன் இணைந்து இருதரப்பு பயிற்சியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளன. (எ)

## புத்தாண்டு விளையாட்டுகளுக்கான சுகாதார வழிகாட்டல்கள் வெளியீடு

கொழும்பு, ஏப். 14

புத்தாண்டு காலத்தில் ஏற்பாடு செய்யப்படும் போட்டிகள் மற்றும் நிகழ்வுகளின் போது இடம்பெறும் விபத்துகளை குறைப்பதற்காக வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுமாறு சுகாதார துறையினர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவினால் இந்த வழிகாட்டல் கோவை வெளியிடப்பட்டுள்ளது.

இதில் விழாக்களை நடத்தும் போது பின்பற்ற வேண்டிய பொதுவான வழிமுறைகள் மற்றும் குறிப்பிட்ட சில விளையாட்டு நிகழ்வுகளுக்கான விசேட வழிகாட்டல்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

குறுந்தூர ஓட்டம், மரதன் ஓட்டப் போட்டிகள் மற்றும் சைக்கிள் ஓட்டப் பந்தயம் போன்ற நீண்ட நேரம் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றுபவர்கள், போட்டிக்கு குறைந்தது 6 வாரங்களுக்கு முன்னதாகவே பயிற்சியை தொடங்க வேண்டும்.

அத்துடன் ஒரு பயிற்றுவிப்பாளரின் கீழ் பயிற்சி பெறுவது மிகவும் பொருத்தமானது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விழா நடைபெறும் இடத்தில் சகல வசதிகளுடனும் கூடிய முதலுதவி மத்திய நிலையம் ஒன்றையும், தேவையான மருத்துவ உபகரணங்களுடன் கூடிய மருத்துவ வசதிகளையும் உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

எனவே, புத்தாண்டு விழாக்களை ஏற்பாடு செய்யும் போது இந்த வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்றுமாறு சுகாதாரத் துறையினர் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொல்புரத்தில் இளைஞர் கொலை; நால்வரை கைது செய்தது பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஏப். 14

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொல்புரம் பகுதியில் இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு தொல்புரம் கொட்டடியம்பதி ஆதி முத்துமாரியம்மன் கோயிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் கு.மயூரன் என்பவர் ஸ்தலத்தில் உயிரிழந்ததுடன், மற்றைய ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார்.

தாக்குதலை மேற்கொண்ட சந்தேகநபரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் பிரதான சந்தேக நபரான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் உட்பட நால்வரையும் வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-05)

# சட்டவிரோத ஐந்து அதிவேக மோட்டார் சைக்கிள்களை வைத்திருந்தவர் கைது!

கொழும்பு, ஏப். 14

பிலியந்தலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமிந்த குலசிங்கவுக்கு கிடைத்த தகவலின் பேரில் சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான ஐந்து அதிவேக மோட்டார் சைக்கிள்களை வைத்திருந்த வாகனம் பழுதுபார்க்கும் நிலையத்தின் உரிமையாளரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பிலியந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அங்கு ஒருங்கிணைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்று சுமார் 65 இலட்சம் ரூபா பெறுமதியானது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட குறித்த உரிமையாளரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், நால்வர் இந்த மோட்டார் சைக்கிள் பாகங்களை தன்னிடம் கொண்டு வந்து கொடுத்ததாகவும், தான் அவற்றை ஒருங்கிணைக்கும் பணியை மாத்திரமே செய்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பிலியந்தலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 119 அழைப்புக்களுக்கு...

4,000 முதல் 4,500 வரை அழைப்புகள் பெறப்படுகின்றன.

மேலும், முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பொலிஸாரின் செயல்பாடுகள் குறித்து பொதுமக்களின் கண்காணிப்பு அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விமர்சனங்கள் இருந்தபோதிலும், இலங்கை பொலிஸார் மற்றும் சில அதிகாரிகளின் நேர்மையான பங்களிப்புகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களுக்கு மேலும் திறமையான மற்றும் விரைவான சேவையை வழங்கும் நோக்கில், பொலிஸாரின் பதிலளிப்பு அமைப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## புத்தாண்டு காலத்தில்...

மதுபோதையில் எக்காரணம் கொண்டும் வாகனம் ஓட்ட வேண்டாம் எனவும் அவர் அறிவுறுத்தினார். அதிக சோர்வு மற்றும் தூக்கமின்மை விபத்துக்களுக்கு காரணமாக அமைவதால், அது குறித்து அவதானமாக இருக்க வேண்டும்.

தூய்மையான உணவுகளை மாத்திரமே உட்கொள்ள வேண்டும். வறண்ட வானிலை நிலவுவதால் குடிதண்ணீர் குறித்து அவதானமாக இருக்குமாறும், முடிந்தவரை கொதித்தாறிய நீரைப் பருகுங்கள்.

நீரிழிவு, இதய நோய் மற்றும் சிறுநீரக நோய்களுக்காக நீண்டகாலமாக சிகிச்சை பெற்று வருபவர்கள், திருவிழாக் காலத்தில் உணவுப் பழக்கவழக்கங்கள் மாறினாலும் மருந்துகளை உட்கொள்ள மறக்க வேண்டாம் என அவர் வலியுறுத்தியதோடு, திருவிழாக் காலத்தின் பின்னர் இவ்வாறான நோயாளிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் வீதம் அதிகரிப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

## தனியார் பஸ்ஸை...

அரச பஸ் முன்னால் வந்த காருக்கு இடம்கொடுக்க முற்பட்டவேளை இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-05)

## பால் குடித்துவிட்டு...

அதன் பின்னர் காலை 6 மணியளவில் குழந்தையை பார்த்தவேளை மூக்கினால் பால் வெளிவந்த நிலையில், குழந்தை விறைத்த நிலையில் காணப்பட்டது.

இதன்போது குழந்தையை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை, குறித்த குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நிமோனியா காரணமாக குழந்தை உயிரிழந்ததாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ- 05)

## வளைகுடா நாடுகளில்...

கட்டுப்படுத்துவது கூடாது என அமெரிக்கா சில நிபந்தனைகளை விதித்தது. அதில், இரு நாடுகளுக்கும் இடையே உடன்பாடு எட்டப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்லும் அனைத்து கப்பல்களும் முற்றுகையிடப்படும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் விதமாக ஈரான் வெளியிட்ட அறிக்கையில், "ஹோர்முஸ் நீரிணை மற்றும் ஓமன் கடற்பகுதியின் பாதுகாப்பு என்பது அனைவருக்குமானது அல்லது யாருக்கும் உரிமையில்லாதது என இஸ்லாமியக் குடியரசான ஈரானின் ஆயுதப் படைகள் தெளிவாகவும் உறுதியாகவும் அறிவிக்கின்றது.

ஈரான் எல்லைக்குள்பட்ட நீர்ப்பரப்பில் ஆயுதப் படைகளின் உறுதியான பாதுகாப்பு தொடரும். மேலும் பலமுறை எச்சரித்ததன்படி, எதிரி தரப்பு கப்பல்களுக்கு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல அனுமதியில்லை. எப்போதும் இருக்கப் போவதில்லை. மற்ற கப்பல்கள் ஈரான் ஆயுதப் படைகளின் விதிமுறைகளுக்கு உள்பட்டு ஹோர்முஸ் நீரிணை வழியாகச் செல்ல தொடர்ந்து அனுமதிக்கப்படும்.

போர் முடிந்த பின்னரும் ஈரானின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் தரும் விதமாக அமெரிக்கா நடந்துகொள்வதால், ஹோர்முஸ் நீரிணையைக் கட்டுப்படுத்துவதற்கான நெறிமுறைகளை ஈரான் உறுதியாகச் செயல்படுத்தும். சர்வதேச கடல் பகுதியில் கப்பல்களின் நடமாட்டத்திற்கு குற்றவாளி நாடான அமெரிக்கா விதித்துள்ள கட்டுப்பாடுகள் சட்டவிரோதமானது. அது கடற்கொள்ளைக்குச் சமமானது.

ஹோர்முஸ் நீரிணை பிரச்னையில் ஈரான் துறைமுகங்களை அமெரிக்கா முற்றுகையிட்டால், வளைகுடா நாடுகளில் உள்ள துறைமுகங்களில் நாங்கள் தாக்குதல் நடத்துவோம்" என ஈரான் அறிவித்துள்ளது. (அ)

# வெற்றிலை விலை உயர்வு

கொழும்பு, ஏப். 14

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு வெற்றிலைக்கு அதிக தேவை உள்ள நிலையில், வெற்றிலையின் விலை வேகமாக அதிகரித்துள்ளது.

அதன்படி, சந்தையில் ஒரு கைப்பிடி வெற்றிலையின் விலை சுமார் 400 ரூபாவை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு சிறிய கைப்பிடி வெற்றிலை சுமார் ரூ. 200-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வறண்ட காலநிலை காரணமாக வெற்றிலை அறுவடை குறைந்ததும் வெற்றிலை விலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளது. (அ)

## அமைதிக்காக குரல்...

சாடியிருந்தார்.

மேலும், பாப்பரசர் ஒரு அரசியல்வாதியாக இல்லாமல், போப்பாக மட்டும் இருக்க வேண்டும் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

இது குறித்து அல்ஜீரியா செல்லும் விமானத்தில் செய்தியாளர்கள் கேட்டபோது, பாப்பரசர் லியோ புன்னகையுடன், "அவர் கருத்துத் தெரிவித்த அந்தத் தளத்தின் பெயரே முரணாக உள்ளது. அதற்கு மேல் நான் எதுவும் சொல்லத் தேவையில்லை," என்று கிண்டலாகப் பதிலளித்தார்.

"ட்ரம்ப் நிர்வாகத்திற்கோ அல்லது சுவிசேஷத்தின் செய்தியை உரக்கச் சொல்வதற்கோ நான் பயப்படவில்லை. அதுவே எனது பணி," என்று பாப்பரசர் திட்டவட்டமாகக் கூறினார்.

தான் ஒரு அரசியல்வாதி அல்ல என்றும், ஜனாதிபதி ட்ரம்ப்புடன் தனிப்பட்ட விவாதத்தில் ஈடுபடத் தான் விரும்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சுவிசேஷத்தின் செய்தி சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கவலை வெளியிட்டார்.

ரோம் நகரிலிருந்து அல்ஜீரியா, கமரூன், அங்கோலா மற்றும் ஈக்குவடோரியல் கினியா ஆகிய நான்கு நாடுகளுக்கு 10 நாட்கள் பயணமாக பாப்பரசர் லியோ புறப்பட்டுள்ளார்.

"உலகில் இன்று பல அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள், பலர் துன்பப்படுகிறார்கள். அமைதிக்கும் பேச்சுவார்த்தைக்கும் ஒரு சிறந்த வழி இருக்கிறது என்பதை யாராவது ஒருவர் உரக்கச் சொல்லித்தான் ஆகவேண்டும்," என்று அவர் தனது பயணத்தின் நோக்கத்தை விளக்கினார். (அ)

## அமெ.-ஈரான் இடையே...

நிலவுகிறது. நான் எதனையும் ஊகிக்க விரும்பவில்லை, ஆனால் பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்பகட்ட சூழல் ஆரோக்கியமாக உள்ளது.

இதுவரை எதிர்மறையான முடிவுகள் எதுவும் வெளிவரவில்லை" என அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், பாகிஸ்தான் அமைச்சரின் இந்த கருத்து சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது. (அ)

## இலங்கையில் ஏழு...

வயதுக்கு மேற்பட்ட 20,566,680 மொத்த சனத்தொகையில், குறைந்தது ஒரு குறைபாட்டைக் கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 727,293 என இனங்காணப்பட்டுள்ளது. இது நாட்டின் ஒவ்வொரு 1,000 நபர்களுக்கும் 35 பேர் குறைபாடுகளுடன் உள்ளனர் என்பதைக் குறிக்கிறது.

பாலின ரீதியாக நோக்குகையில், ஆண்களை விடப் பெண்களே அதிகளவில் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, 413,939 பெண்களும் 313,354 ஆண்களும் குறைபாடுகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

குறைபாடுகளின் வகைகளைப் பார்க்கும்போது, நடப்பதில் அல்லது படிகளில் ஏறுவதில் சிரமம் உள்ளவர்களே அதிகளவில் (447,969 நபர்கள்) பதிவாகியுள்ளனர். இது ஒவ்வொரு 1,000 பேருக்கும் 22 நபர்கள் என்ற விகிதத்தில் உள்ளது.

இதற்கு அடுத்தபடியாகப் பார்வை குறைபாடு உள்ளவர்கள் 192,578 நபர்களாகவும், தங்களைத்தாமே கவனித்துக்கொள்வதில் (குளித்தல், உடை அணிதல் போன்றவை) சிரமம் உள்ளவர்கள் 189,292 நபர்களாகவும் உள்ளனர்.

ஞாபகசக்தி அல்லது ஒரு விடயத்தில் கவனம் செலுத்துவதில் சிரமம் உள்ளவர்கள் 167,826 நபர்களாகவும், செவிப்புலன் குறைபாடு உள்ளவர்கள் 130,097 நபர்களாகவும் பதிவாகியுள்ளனர்.

மற்றவர்களுடன் தொடர்பாடல் மேற்கொள்வதில் சிரமம் உள்ளவர்கள் மிகக்குறைந்த எண்ணிக்கையில் (112,798 நபர்கள்) உள்ளனர்.

துறை ரீதியான பரம்பலில், கிராமப்புறத் துறையிலேயே அதிகளவான குறைபாடுகள் கொண்ட நபர்கள் (601,740) வசிக்கின்றனர். எனினும், பார்வை குறைபாட்டு விகிதம் மட்டும் தோட்டப்புறத் துறையில் 1,000 பேருக்கு 12 பேர் என்ற அளவில் மிக உயர்வாகக் காணப்படுகிறது.

மாவட்ட ரீதியாக ஒப்பிடுகையில், கம்பஹா மாவட்டத்தில் அதிகப்படியான நபர்கள் (75,118) குறைபாடுகளுடன் வாழ்கின்றனர்.

ஆனால், சனத்தொகை விகிதாசாரப்படி குருநாகல் மாவட்டம் 1,000 பேருக்கு 43 பேர் என்ற அடிப்படையில் மிக உயர்ந்த குறைபாட்டு விகிதத்தைக் கொண்டுள்ளதுடன், கொழும்பு மாவட்டம் 25 பேர் என்ற அடிப்படையில் மிகக்குறைந்த விகிதத்தைக் கொண்டுள்ளது.

வயது முதிர்வுக்கும் குறைபாடுகளுக்கும் இடையில் நேரடித் தொடர்பு இருப்பதை இந்த அறிக்கை உறுதிப்படுத்துகிறது. குறிப்பாக 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களில் மூன்றில் ஒருவருக்கு ஏதேனும் ஒரு குறைபாடு காணப்படுவதுடன், வயது அதிகரிக்கும்போது ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகள் ஏற்படும் விகிதமும் அதிகரிக்கிறது.

உதாரணமாக, 80 வயதிற்கு மேற்பட்டவர்களில் 79,306 பேர் ஒன்றுக்கும் மேற்பட்ட குறைபாடுகளையும், 63,071 பேர் ஒரு குறைபாட்டையும் கொண்டுள்ளனர்.

இறுதியாக, திருமண நிலை குறித்துப் பார்க்கையில், குறைபாடுகள் உள்ளவர்களில் திருமணமானவர்கள் அதிக எண்ணிக்கையில் (385,815) உள்ள போதிலும், துணையை இழந்தவர்களில் 1,000 பேருக்கு 152 பேர் என்ற விகிதத்தில் குறைபாடுகள் மிக உயர்வாகப் பதிவாகியுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# செம்மணி புதைகுழி அகழ்வுக்கு 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி!

## மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி விரைவில்

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகளுக்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை இரண்டு கட்டங்களாக அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில், 240 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றில் 239 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டிருந்தன.

மூன்றாம்கட்ட அகழ்வுப் பணிகள் சீரற்ற காலநிலை காரணமாகப் பிற்போடப்பட்ட நிலையில், இந்த மாதத்தின் இறுதியில் அல்லது எதிர்வரும் மாதத்தின் ஆரம்பத்தில் அந்தப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது.

எனினும், அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்படாததால், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிக்கான திகதிகள் இதுவரை நிர்ணயம் செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையிலேயே, இந்தப் பணிகளுக்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதியன்று மீள விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

நிதி விடுவிக்கப்பட்டுள்ளதால், அன்றைய தினம் அகழ்வுத் திகதிகள் அறிவிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் 19 ஆம் திகதி பிரார்த்தனை

கொழும்பு, ஏப். 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக, இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை, எதிர்வரும் 19 ஆம் திகதியை, பிரார்த்தனை தினமாக பிரகடனப்படுத்தியுள்ளதாக, கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

2019 இல், குண்டுத் தாக்குதல் நடந்த தினமான ஏப்ரல் 19 ஆம் திகதி, இலங்கையில் உள்ள அனைத்து கத்தோலிக்கத் தேவாலயங்களிலும், விசேட பிரார்த்தனை வழிபாடுகள் நடத்தப்படும்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் எதிர்பார்ப்பது போல, இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள உண்மைத் தன்மையை இறைவன் வெளிப்படுத்த வேண்டும் என வேண்டி, இந்தப் பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை குறிப்பிட்டுள்ளார். (அ)

# மதுபானச்சாலைக்கு அருகே மோதல் பலகையால் தாக்கி ஒருவர் கொலை!

கொழும்பு, ஏப். 14

மதுரட்ட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மானகொல பகுதியில் அமைந்துள்ள மதுபானச்சாலை ஒன்றிற்கு அருகில் ஏற்பட்ட தகராறில் மரப்பலகை ஒன்றினால் தாக்குதலுக்குள்ளாகி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மானகொல, ஏலமுல்ல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவருக்கும் மற்றுமொரு நபருக்கும் இடையில் காணப்பட்ட தனிப்பட்ட கோபமே இந்த கொலைக்குக் காரணம் என முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மரப்பலகை ஒன்றினால் தாக்குதலுக்குள்ளாகி காயமடைந்த நபர் ரிக்கில்லகஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலையுடன் தொடர்புடைய ஏலமுல்ல பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 817 விற்பனை நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, பொது மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில், நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனைகளின் போது, 817 விற்பனை நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விசேட நடவடிக்கையானது, கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட 967 உணவுச் சோதனைகளின் ஊடாகவே, இந்த 817 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதியில், 2 ஆயிரத்து 300 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பங்கேற்புடன், இந்தச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதுவரை, 11 ஆயிரத்து 64 நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளதுடன், 967 உணவுச் சோதனைகளும், 3 ஆயிரத்து 45 உணவுப் பொருட்கள் பொறுப்பேற்புகளும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன், 2 ஆயிரத்து 299 சந்தர்ப்பங்களில் உணவுகள் அழிக்கப்பட்டதுடன், 817 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

# ஈரானிய படையினர் விவகாரம் குறித்து இலங்கை அரசே தீர்மானிக்கவேண்டும்

## இஸ்ரேலிய தூதுவர் கருத்து

கொழும்பு, ஏப். 14

இலங்கையில் உள்ள ஈரானிய கடற்படையினரை அவர்களது தாயகத்துக்கு அனுப்பி வைப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால் அவர்கள் நாடு திரும்பியதன் பின்னர் அமெரிக்காவுக்கோ, எமக்கோ எதிரான போர்களில் ஈடுபடாதவாறான செயற்பாடு உறுதிப்படுத்தப்பட்டால் இலங்கையின் தீர்மானத்தில் திருப்தி அடைவோம் என்று இஸ்ரேலிய தூதுவர் ருவெண் ஜேவியர் அஸார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் உள்ள ஈரானிய கடற்படையினரை அவர்களது தாயகத்துக்கு அனுப்புவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தான் தீர்மானிக்க வேண்டும். எம்மைப்பொறுத்தவரையில் குறித்த கடற்படை வீரர்கள் மீண்டும் நாடு திரும்பும்போது அவர்களோ அவர்களின் கப்பல்கள் எமக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ எதிரான போர்களில் ஈடுபடாதவாறு இருக்க வேண்டும். அவ்வாறான செயலிழப்பு செயற்பாட்டை உறுதிப்படுத்தும் இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தில் திருப்தி அடைவோம்-என்றார். (அ)

# இரு யுவதிகள் துஷ்பிரயோகம் போதகர் உள்ளிட்ட மூவர் கைது!

கிளிநொச்சி, ஏப். 14

மல்லாவியில் இரு பெண்களை துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் மத போதகர் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளன் இரு பெண்களும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்,

திருச்சபை ஒன்றின் ஊழியர் ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக போதகர் தலைமையில் 15 பேர் கொண்ட குழு ஒன்று வவுனிக்குளம் பகுதிக்கு சென்று பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கொண்டாட்டம் முடிந்து அவர்கள் திரும்பும்போது இரு பெண்களும் போதகர் உள்ளிட்ட மூன்று ஆண்களும் வான் ஒன்றில் வீடு திரும்பினார்கள்.

பயணத்தின் நடுவில் யுவதிகளுக்கு குடிப்பதற்கு வைன் வழங்கியுள்ளனர். அதனை அருந்தியவர்கள் அரை மயக்கத்தில் இருக்கும்போது, காட்டுப் பகுதிக்கு வாகனத்தை கொண்டு சென்று இரு யுவதிகளுடனும் போதகர் உள்ளிட்ட மூவரும் அத்துமீறி நடந்து, பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியுள்ளனர்.

அதன் பின்னர் வீடு திரும்பிய இரு யுவதிகளும் நடந்த சம்பவம் தொடர்பில் பெற்றோரிடம் கூறியதை அடுத்து இருவரையும் பெற்றோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடும் செய்திருந்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் போதகர் உள்ளிட்ட மூவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மக்களின் நலன்களை பிரதிபலிப்பதாக அமையவேண்டும்

## டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 14

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டங்கள் மக்களின் நலன்களையும் அவர்களது எண்ணங்களை பிரதிபலிப்பதாகவும் இருக்க வேண்டும். தலைமை தாங்குகின்றவர்களின் ஆற்றல், ஆளுமை, அக்கறை அல்லது அவர்களது உணர்வுகள் மக்களது உணர்வுகளை பிரதிபலிக்கும் எண்ணங்களோடு தொடர்புடையதாகவும் இருக்க வேண்டும் என ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

புதிய அரசாங்கத்தைப் பொறுத்தவகையில் அவர்கள் ஆட்சிக்கு வரும் முதல் மக்களது பல பிரச்சினைகள் தொடர்பாக நல்லபல விடயங்களை எல்லாம் கூறிவந்திருக்கின்றார்கள்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்கள் ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருட காலத்திற்கு மேலாகிவிட்ட நிலையில் மக்களது நலன்களை பேணக்கூடிய பிரச்னைகளை தீர்க்கக்கூடிய வகையிலான எந்தவித அணுகுமுறைகளையோ பொறிமுறைகளையோ கொண்டிருப்பதாகவோ முன்னெடுப்பதாகவோ தெரியவில்லை.

குறிப்பாக மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்தி கூட்டங்கள் என்பது அந்தந்த மாவட்ட மற்றும் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் வாழ்வாதார தேவைகளை முன்னிறுத்தி பல்துறை அதிகாரிகள், அமைப்புகளுடன் கலந்துரையாடி ஆலோசனைகளை பெற்று தீர்வுகளை காண முன்னெடுக்கப்படும் ஒரு கூட்டமாகும்.

குறிப்பாக அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குகின்றவர்களின் ஆற்றலும் அக்கறையும் அல்லது அவர்களது உணர்வுகளும் மக்களது உணர்வுகளை பிரதிபலிக்கின்ற எண்ணங்களோடு தொடர்புடைய விடயமாக இருக்கவேண்டும்.

ஆனால் தற்போது பல ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் மாவட்டத்திலும் சரி பிரதேசங்களிலும் சரி நடத்தப்பட்டாலும், அரச அதிகாரிகள் உள்ளடங்கலாக பொதுமக்களது பிரதிநிதிகள் அல்லது பொதுமக்கள் தமது நியாயமான பிரச்னைகளை கடந்த காலத்தில் முன்வைத்து தீர்வு கண்டது போன்று தற்போது அதை செய்யமுடியவில்லை என்ற ஒரு அங்கலாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக சமூகவலைத் தளங்களிலும் நேரில் வந்து என்னை சந்தித்தவர்களும் தொடலைபேசியூடாகவும் தெரியப்படுத்தி இருக்கின்றனர்.

அத்துடன் கூட்டங்களின் செய்திகளை சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பங்கள் மறுக்கப்படுவதாக அல்லது அவர்களை தட்டிக்கழிப்பதாகவும் தெரியவருகின்றது.

நாம் பொறுப்பிலிருந்த காலங்களில் ஊடகங்களுக்கு எந்த சந்தர்ப்பங்களிலும் இவ்வாறு அனுமதிகளை மறுத்தது கிடையாது. அவர்களை அவர்கள் பாணியில் செய்தி சேகரிக்க சுதந்திரமாகவே அனுமதித்திருந்தோம்.

ஆனால் இன்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஏற்பட்டுள்ள இந்த சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமானதாக இருக்கின்றது. அதனடிப்படையின் மக்களின் நலன்களை கருத்திற் கொண்டு அது தொடர்பாக ஜனாதிபதி அனுரவுடன் பேசவுள்ளேன்-என்றார். (அ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org